1972 ஆகஸ்ட் 19]

*198. வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் தாதகவுண்டன் பட்டிக்கருகில் அணைக்கட்டுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், இத்திட்டம் நிறைவேற்றப்படுவதில் கால தாமதம் ஏற்படுவதற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டம் சிக்கனமற்றதாகக் கருதப்பட்டுள்ளது. பிற சிக்கனமற்ற திட்டங்களுடன் சேர்க்கப்பட்டு இதுவும் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மிகவும் பின்தங்கிய பகுதியிலே போடப்பட்டிருக்கிற திட்டம் ஆகும். அன்எக்கனுமிக் ஸ்கீம் என்ற அடிப்படையிலே பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் அரசிடனிடத்திலே இருக் கின்றன. சிக்கனமற்ற திட்டம் என்று பார்ப்பதைவிட பின் தங்கிய பகுதியிலே இருக்கின்ற திட்டம் என்று பார்த்து அந்த முறையிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத் தினுடைய மொத்த மதிப்பீடு 3 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய். மதுரை மாவட்டத்திலே டன் ஒன்றுக்கு 3,000 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உணவு உற்பத்தி டன் ஒன்றுக்கு 6,616 ரூபாய் அளவுக்கு ஆகும் என்று தெரிகிறது. இத் திட்டம் சிக்கனமற்றதாகக் கருதப்பட்டாலும் பிற சிக்கனமற்ற திட்டங்களுடன் சேர்க்கப்பட்டு இதுவும் அரசின் ஆய்வில் உள்ளது.

கால்நடைகள் வாங்கக் கடனுதவி

*199. வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராம கூட்டுறவு நாணய சங்கங்கள் மூலம் அரிஜனங்களுக்கு மாடு ஆடுகள் வாங்கப் பணம் கடன் வழங்கும் உத்தேசம் ஏதே னும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?